ஐக்கிய தீபம்
Aikyatheepam
விலை ரூபா 5/-
தீபம் 56 | ஐப்பசி - 2001 | பக்கங்கள் 12 | ஒளி 51

★ கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்—

# சாதாரண மக்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் உந்துசக்தியாக இருக்க வேண்டும்.

## கிராமியவங்கித் திறப்பு விழாவில் அரச அதிபர் சண்முகநாதன் பேச்சு.

புங்குடுதீவு மக்கள் அன்று முதல் இன்றுவரை ஒரே தன்மையான பிரச்சினைகளையே எதிர் நோக்குகின்றார்கள். இப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது என்பது சுலபமான காரியமல்ல. மக்கள் தங்களது சகல தேவைகளுக்கும் அரசாங்கத்தை மட்டும் நம்பியிராது சுயமாகப் பூர்த்தி செய்யக் கூடியவற்றை இனம் கண்டு தாமே பூர்த்தி செய்ய வேண்டும்.

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கிராமிய வங்கியினையும், அதன் மேல் மாடிக்கட்டிடத்தையும் திறந்து வைத்துப் பேசிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க சண்முகநாதன் மேற் கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் லயன் டாக்டர் க. இராசரத்தினம் ஜே. பி. தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திரு: க. சண்முகநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

இன்று திறந்து வைக்கப்பட்ட இந்தக் கிராமிய வங்கி புங்குடுதீவு - நயினாதீவு மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்ற வேண்டும். சாதாரண மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். புங்குடுதீவு - நயினாதீவு மக்களின் அபிவிருத்தியில் இந்த வங்கி தன்னாலான பங்களிப்பினைச் செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் இப் பகுதியில் மக்கள் வங்கியின் சேவையை ஆரம்பிப்பதற்கு இக்கிராமிய வங்கி உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

இப்பகுதி மக்கள் இன்று எதிர் நோக்குகின்ற பாரிய பிரச்சனை குடிநீர்ப் பிரச்சனையாகும். இப் பிரச்சனை அன்றும் இருந்தது இன்றும் இருக்கிறது; இதனைத் தீர்த்து வைப்பதற்கு நாம் எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டு வருகின்றோம்.

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு பெண்ணை தனது பொது முகாமையாளராக கொண்டு இயங்குகிறது. அவர் இப்பகுதி மக்களின் அத்தியாவசியதேவையான உணவுத்தேவையை நன்குணர்ந்து அதனைச்சிறந்த முறையில் நிறைவு செய்து வருகிறார். இதற்காக தான் அவரைப் பாராட்டுகிறேன் என்று கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரையாற்றுகையில் கூறியதாவது;

கடந்த காலங்களில் இடம்பெற்ற இடப்பெயர்வுக்குப் பின் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்ல பல திட்டங்களை முன்னிலைப்படுத்தி முன்னேற்றம் கண்டு வருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

நயினாதீவு மக்களுக்குத் தனியானதொரு சங்கம் தேவை என இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களின் வேண்டுகோளை நாம் அக்கறையுடன் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

(12ம் பக்கம் பார்க்க)

உள்ளே....

* ஐக்கிய நாடுகள் சபை
* இருமிநாசினிகளைக் கலந்து
* வணிகக் கல்வி வினாவிடை
* மக்கள் சேவையில்
* கூட்டுறவு இயக்கத்தின்
* பெண்ணியப்பேரழிவு
* வன் செயலினால் பாதிக்கப்பட்ட
* பொது அறிவு

# ஐக்கியநாடுகள் சபை(UnitedNations of OrganizationUNO)

ஐக்கிய நாடுகள் தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது

உலக நாடுகள் அனைத்தினதும் பொது மன்றமாக இயங்கும் ஓர் அமைப்பே இதுவாகும். இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயம் உலகப் போர் ஒன்று மீள ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்காகப் பொது அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டுமென்ற கருத்து உலகத் தலைவர்கள் மத்தியில் தோன்றியது அதன் செயல்வடிவமாகவே ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது இதற்கு முன்னோடியாக 1945 ஏப்பிரல் 25ம் திகதி ஐக்கிய நாடுகள் சாசனம் வரையறுக்கப்பட்டது.

1945 யூன் 26ல் அமெரிக்காவின் சான்பிராஸ்சிக்கோ நகரில் வைத்து உலகத் தலைவர்களால் ஐக்கிய நாடுகள் சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதில் 50 நாடுகள் பங்கேற்றன. 1945 ஒக்ரோபர் 24ல் நியூயோர்க் நகரில் வைத்து உலகின் முன்னணி சக்திமிக்க நாடுகளின் தலைவர்கள் பலரால் ஐக்கியநாடுகள் சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை என்ற பெயர் உருவாகக் காரணமாக இருந்தவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி F. W. D ரூஸ்வெல்ட் ஆவர். வருடாந்தம் ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் தினமாக உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது 1946இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுக் கூட்டத்தில் 51 நாடுகள் மட்டுமே பங்கேற்றன, ஐ. நா சபையின் வருடாந்த அமர்வுகள் செப்ரெம்பர் டிசம்பர் காலப்பகுதியில் நடைபெறுகின்றது. தலைமைக் காரியாலயம் நியூயோர்க்நகரில் அமைந்துள்ளது

உலக சமாதானத்தைக் குறிக்கும் ''ஒலிவ்'' மரக்கிளை ஐ. நா. சபையின் சின்னத்தில் இடம் பெற்றுள்ளது. ஐ. நா. சபையில் உத்தியோகபூர்வ மொழிகள் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்யா, சீனா, அரபு, ஸ்பாணி ஆகும இதன் முதலாவது பொதுச் செயலாளர் 'டிறிக் விலி'' 1945 தொடக்கம் 1953 வரை பொதுச் செயலாளராக இருந்தார். இவர் நோர்வே நாட்டவர் ஆவர்.

ஐ. நா சபையில் தற்போது 185 நாடுகள் அங்கம் வகிக்கின்றது இறுதியாகச் சேர்ந்தநாடு ''அந்தோரா'' நாடு ஆகும் ஐ. நா. பணிமனையின் தலைமைப் பொறுப்பை செயலாளர் நாயகமே வகிக்கின்றார்: இவரது பதவிக்காலம் ஐந்து வருடங்கள் தற்போதைய செயலாளர் நாயகமாக ''கொபி அன்னான்'' அவர்கள் செயல்பட்டு வருகின்றார். இவர் கானா நாட்டின் இராஜதந்திரியும் பழுத்த ஐ. நா. அதிகாரியுமாவர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவுகளாவன,

i) பொதுச்சபை: இச் சபையில் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் இதில் அங்கம் வகிக்கின்றன. இச் சபை தான் ஐ. நா சபையின் விவாத மேடையாகத் திகழ்கின்றது. புதிய நாடு ஒன்றினைச் சேர்ப்பதாயின் பொதுச்சபையில் 2/3 பங்குநாடுகளின் ஆதரவு அவசியம் தேவை பொதுச் சபையின் முதலாவது அமர்வு 1946 யூன் 10இல் நடைபெற்றது ஐ. நா. பொதுச் சபை தனது அவசரக் கூட்டத்தை முதன்முதலாக 1959 சுயெஸ் கால்வாய் பிரச்சினைக்காக கூட்டியது.

ii) பாதுகாப்புச் சபை;- ஐ. நா. சபையில் மிகச் சக்தி வாய்ந்த அமைப்பு இதுவாகும். உலக சமாதானத்தையும் உலகளாவிய பாதுகாப்பையும் பேணுவது பாதுகாப்புச் சபையின் பொறுப்பாகும் பாதுகாப்பு சபையில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் 5 நாடுகள் நிரந்தர அங்கத்துவ நாடுகளாகவும். ஏனைய 10 நாடுகளும் தற்காலிக அங்கத்துவ நாடுகளாகவுள்ளது. இதில் ஐக்கிய அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா ரஷ்யா, ஆகியஐந்துநாடுகளுக்கு மேநிரந்தர அங்கத்துவ நாடுகளாக உள்ளன. இந்தநாடுகளுக்குப்பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானம் தொடர்பில் '' வீட்டோ '' (Veto) எனப்படும் ''வெட்டு வாக்கு,' அதிகாரம் உள்ளது. நிரந்தர அங்கத்துவ நாடொன்று தீர்மானமொன்றின் மீது வெட்டுவாக்கைப் பிரயோகிக்குமாயின் அத்தீர்மானம் செல்லுபடியற்றதாகிவிடும்.

(12ம் பக்கம் பார்க்க)


## கூட்டுறவு சேவையை பெற வாருங்கள்!

சுன்னாகம் பனை தென்னை வள. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

சமூக பொருளாதார அபிவிருத்தியும்கலாச்சாரமும்

கூட்டுறவுக்கல்வி சித்த மருத்துவம்

பாலர்கல்வியும் போசாக்கும்.

- பனை தென்னை அபிவிருத்தியும் மீள்நடுகையும்
- உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்
- லான்ட்மாஸ்டர் சேவையும்

- *கிராமியவங்கிச்சேவை - கணனி அச்சுப்பதிவு*
- *மனையியல் பயிற்சி - மகளிர் தையல் நிலைய சேவை*
- *தொலைத்தொடர்பு - போட்டோபிரதி சேவை*

'' மக்கள் சேவைக்காய் கூட்டுறவில் ஒன்றிணைவோம் ''

தொடர்புகட்கு: சுன்னாகம் ப.தெ. வ. அ. கூ. சங்கம்
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

தொலைபேசி உள்ளூர் : 070 - 212632
வெளியூர் : 0094-7-0212632

**மண்வளம்**

# கிருமிநாசினிகளைக் கலந்து பாவிக்கும் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை.

எமது நாட்டில் சிபாரிசு செய்யப்படும் அனைத்து பீடை நாசினிகளும் 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவையாகும். பதிவு செய்ய முன்னர் இந் நாசினிகள் அனைத்தும் இங்கு பரிசோதிக்கப்படும். ஒரே இரசாயனத்தைக் கொண்ட நாசினி பல்வேறு வடிவங்களில் (குறுனல்கள், செறிகுழம்பு போன்று) தயாரிக்கப்பட்ட தாயின் அவை அனைத்தும் தனித்தனியாக பதிவு செய்யப்படல் வேண்டும். இந் நாசினிகளைப் பரிசோதிக்க விவசாயத் திணைக்களத்தோடு ஏனைய நிறுவனங்களும் உதவுகின்றன.

லேபிள்களில் குறிப்பிடப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் முறையாகக் கடைப்பிடிப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஆனால் சில விவசாயிகள் தாம் நினைத்தவாறுபல பீடைநாசினிகளை ஒன்றாக கலந்து விசிறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த பயனையும் அடைய முடிவதில்லை எனவே இக் கட்டுரை பீடை நாசினிகளைக் கலவை செய்வது தொடர்பான சில விபரங்களைத் தருகின்றது. பீடை நாசினிகளைப் பயன்படுத்தும் அனைவருக்கும் இத் தகவல்கள் பயனுள்ளவையாக இருக்கும்.

*சரியான முறையில் பீடை நாசினிகளை விசுறுங்கள்*

பீடை நாசினிகளிலிருந்து சிறந்த பயனைப் பெற வேண்டுமாயின் பல விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும் முதலாவதாக சிபாரிசு செய்யப்பட்ட நாசினி எது என அறிந்து தெரிவு செய்தல் வேண்டும். இரண்டாவது லேபிலில் குறிப்பிட்டவாறு சிபாரிசு செய்யப்பட்ட சரியான அளவை, குறிப்பிடப்பட்ட அளவுள்ள நீருடன் கலவை செய்ய வேண்டும். இவ்வாறு சரியாகக்கலவை செய்த நாசினியை சரியான நேரத்தில் சரியான பீடையை நோக்கி விசிறல் வேண்டும் குறுனல்கள் அல்லது தூளை நீரில் கலவை செய்யாத போது அதனை சிபாரிசு செய்யப்பட்டவாறு முறையாக விசிறல் வேண்டும்

ஒவ்வொரு தோட்டத்திற்கும் விசிறத் தேவையான மொத்த நீரில் அளவை உறுதியாகக் குறிப்பிட முடியாது. பயிரின் அடர்த்தி அதன் உயரம், வடிவம். இலைப்பரப்பின் அளவு விசிறுபவரின் வேகம், என்பவற்றிற்கேற்ப வேறுபடும் பொதுவாக நப்செக் இயந்திரத்தைப் பயன்படுத்தும் போது ஒரு ஹெக்டயருக்குகளை நாசினியை விசிறுவதாயின் 450 லீற்றர் நீர் தேவை. பங்கசு நாசினியாயின் 550-560 லீற்றர் நீர் தேவை.

*பீடை நாசினியை கலவை செய்தல்*

தோட்டத்தில் பீடை நாசினியைக் கலவை செய்வது என்பது நீருடன் தேவையான நாசினியைக் கலவை செய்வதைக் குறிப்பிடும். இதைத் தவிர பீடை நாசினியின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு வசதியாக ஒட்டி, குழம்பாக்கிபோன்ற பொருட்களை கலவை செய்வதையும் இது குறிப்பிடும். ஆனால் எவ்வகையிலும் இரண்டு நாசினிகளையும் ஒன்றாகக் கலப்பதை இது குறிப்பிடமாட்டாது. இதனால் ஆபத்துக்கள் ஏற்படலாம். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குவசதியாக சில நாசினிகள் ஏற்கனவே கலவை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. எனவே இவற்றை விசிறுவதால் ஆபத்து ஏற்படாது. இதனால் பல நன்மைகள் உள்ளன. இவ்வகையான நாசினிகளை நீங்கள் கடைகளில் வாங்கலாம்.

*முறைப்படி கலவை செய்யப்பட்ட நாசினிகள்*

விவசாயிகளின் நன்மை கருதி பல நாசினிகள் ஏற்கனவே கலவை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன அதிகளவில் களை நாசினிகளிலேயே இந் நிலமை உள்ளது. உதாரணமாக புரோபனில் உடன் பென்ராசமயிட் கலவை (வகீஸ்புரோ) புரோபனில் உடன் ஒக்கிபுளுவோபென் (ஒக்சினில்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை அனைத்தும் பரவலாக எல்லாக்களைகளையும் கட்டுப்படுத்தும். அதே போன்று புரோபனில் உடன் குளோமசோன் நீண்ட காலத்திற்கு தொழிற்படக் கூடியது. இதே போன்று பல பங்கசு நாசினிகளும் ஒன்றாக கலவை செய்யப்படுகின்றன. சிலர் களை நாசினிகளை தமது விருப்பப்படி கலந்து விசிறுகின்றனர். இது பிழையாகும். சில நிறுவனங்கள் கூட இவ்வாறான பிழையான செயல்களில் ஈடுபடுகின்றன. எனவே கலவை செய்ய முன்னர் அவை சரியானதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

*பீடை நாசினியைத் தயாரிக்கும் போது*

பீடை நாசினியொன்றிலிருந்து கூடிய பயனைப் பெறுவதோடு, அவை தாவரங்களைப் பாதிக்காதவாறு இருப்பதற்கும் பல்வேறு பொருட்கள் அவற்றோடு சேர்க்கப்படுகின்றன. இவ்வாறான பொருட்கள் ஏற்கனவே கலவை செய்யப்பட்டிருக்கலாம். அல்லது விசிறுவதற்கு முன் அதனை கலவை செய்தல் வேண்டும்.

தொகுதிப் பீடை நாசினியொன்றுடன் குழம்பாக்கி (நு அரட நகைநைச) சேர்க்கப்படுகின்றது. இதனால் இரண்டு நன்மை கிடைக்கின்றன: முதலாவதாக இவை நீருடன் இலகுவாக சேருகின்றன. அடுத்ததாக இலையின் ஊடாக இலகுவாக உறிஞ்சப்படுகின்றன; எனவே இரசாயனமொன்று நீருடன் கலக்காத போது குழம்பாக்கியின் உதவியுடன் அதனை நீருடன் கலவை செய்யலாம். சில பொருட்கள் நனைக்கும் பொருளாகவும் தொழிற்படுகின்றன.

(10ம் பக்கம் பார்க்க)

# வணிகக் கல்வி - வினாவிடைத் தொடர்

'' காப்புறுதி '' .

நட்டத்தை பரவலாக்குகிறது.

இதில் கூறப்பட்டிருக்கும் ''காப்புறுதி'' என்ற பதத்தின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

**எதிர்காலத்தில் சொத்துக்கள் உயிர்களுக்கு எதிர்பாராத விதமாக ஏற்படும் அழிவுகள், அபாயங்களினால் பாரிய நட்டத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம். இவ்வாறான நட்டங்களிலிருந்து பணரீதியாக மீண்டு கொள்வதற்காக தற்காலத்திலேயே மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே காப்புறுதி எனப்படும்.**

காப்புறுதி பூட்கை என்பதை வரையறுக்க?

**காப்புறுதி செய்பவர்களுக்கும் காப்புறுதி அளிப்பவருக்கும் இடையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படும் எழுத்தினாலானஒப்பந்தமே காப்புறுதி பூட்கை (OR உடன்படிக்கை OR கொள்கை) எனப்படும். இவ் உடன்படிக்கையானது.**

- ஒருகட்சியால் பிரேரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவரே காப்புறுதி செய்பவராவார்.
- காப்புறுதி அளிப்பவரால் ஏற்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- சட்டத்திற்கு உட்பட்டதாயிருத்தல்
- காப்புறுதி கட்டணம், இழப்பீட்டு தொகை ஆகிய தன்மைகள் கொண்டிருத்தல் வேண்டும்

காப்புறுதித் தத்துவங்களை குறிப்பிட்டு விளக்குக

**காப்புறுதியின் சட்டத் தன்மையை பாதுகாக்கவும் காப்புறுதியின் நம்பிக்கை தன்மையை உயர்த்துவதற்காகவும் பின்பற்றப்படும் கோட்பாடுகளையே காப்புறுதி தத்துவம் எனலாம்.**

1 மிக்குயர் நன் நம்பிக்கைத் தத்துவம்

காப்புறுதி செய்பவர் காப்புறுதி செய்யப்படும்உயிர், சொத்துதொடர்பான சகலஉண்மைத் தகவல்களையும் காப்புறுதி அளிப்பவர் காப்புறுதி ஒப்பந்தம் தொடர்பான சகல உண்மை விபரங்களையும் மறைக்காமல் வெளிப்படுத்த வேண்டும் என்பதையே இத்தத்துவம் கூறுகிறது. உண்மைகள் மறைககப்பட்டமை தெரிய வந்தால் ஒப்பந்தம் முறிவடையும் என்பதனால் இத்தத்துவம் கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகிறது.

2 காப்புறுதி செய்யத்தகு உரிமைத் தத்துவம்

காப்புறுதி செய்யப்படும் உயிர், சொத்திலிருந்து நன்மை பெற்று வருபவர்கள் அவ் உயிர், சொத்துக்கு இழப்பு ஏற்படும்போது பண நட்டத்தை எதிர் கொள்பவர்களுமாகியோரே அவ் உயிர், சொத்து மீது காப்புறுதி செய்யக்கூடிய உரிமையை உடையவராவர் என்பதை இத்தத்துவம் உணர்த்துகிறது.

இதனடிப்படையில் கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும் பெற்றோர்பிள்ளைகள்மீதும் கடன்கொடுத்தோர் கடன்பட்டோர் மீதும் சொத்துக்களை உடமையாக வைத்திருப்பவர்கள்-சொத்தின் மீதும் காப்புறுதி செய்ய முடியும் ஆனால் கடன் கொடுத்தோர் - கடன் பட்டோரின் கடன தொகை அளவுமீதே காப்புறுதி செய்யலாம்.

3. பதிலாள் வைப்புத் தத்துவம்

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து இழப்புக்குள்ளாகிஇழப்பீட்டுதொகையைபெற்றுக்கொண்டபின் அச்சொத்து தொடர்பான உரிமை, மற்றும் சகாய நன்மைகள் காப்புறுதி அளிப்பவருக்கே சேரும் என்பதையே இக் கோட்பாடு கூறுகிறது இதன்படி 3ம் நபர் ஒருவரினால் சொத்து OR ஆயுளுக்கு இழப்பு ஏற்படுத்தப்படுமாயின், 3ம் நபர்மீதான சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமையும் பின்னர் வரும் நன்மைதளையும் காப்புறுதி நிறுவனம் பெற்றுக்கொள்கிறது.

இவ் உரிமையை, காப்புறுதி செய்பவர் காப்புறுதி நிறுவனத்துக்கு பதிலாள் வைப்பு கடித மூலம் வழங்குவார்.

4 பங்களிப்புத் தத்துவம்

ஒரு சொத்து ஒன்றுக்குமேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்யப் பட்டிருக்கும் போது இழப்பு ஏற்படுமாயின் இழப்பீட்டுத் தொகையை, காப்புறுதி நிறுவனங்களின் ஒப்பந்த தொகைவிகிதாசாரத்துக்கமைய வழங்க வேண்டும் என்பதை இத்தத்துவம்கூறுகிறது.

ஆயுள் காப்புறுதியை பொறுத்த வரையில் இத் தத்துவம் பொருந்தாது.

5 அண்மைக் காரணங்கள்

காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காரணத்தால் இழப்பு ஏற்படுமாயின் மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத அண்மைக் காரணங்கள் ஏற்படும் இழப்புகளுக்கு நட்டஈடு வழங்கப்பட மாட்டாது என்பதை இத் தத்துவம் கூறுகிறது.


**வே மணிவதனன்**

முகாமைத்துவ மாணவன் யாழ். பல்கலைக்கழகம்


## கௌரவித்தல்

**புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 25 வருட காலசேவையைப் பூர்த்தி செய்த பணியாளர்களையும் சேவையில் இருந்து ஒய்வு பெற்ற பணியாளர்களையும், சிறந்த கிளை முகாமையாளர்களையும் அண்மையில் பாராட்டிக் கௌரவித்துள்ளது.**

**இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு. ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.**

25 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள பணியாளர்களின் விபரம் பின்வருமாறு;

திருவாளர்கள் ஏ. பி தில்லையம்பலம், திருமதி பு கதிர்காமலிங்கம், எஸ் விக்கினேஸ்வரன், எஸ். விநாயகமூர்த்தி, என் வி. பாலசுப்பிரமணியம், எஸ். செல்வராசா, ஏ. மயூரநாதன், எஸ். தங்கவேல், ஆர். தவராசா, வி. பிலிப்பையா, திருமதிஆர். தில்லையம்பலம், திருமதி பா. புஸ்பராணி, எஸ். பதிமநாதன், எஸ்.பாலகோபாலன்

சேவையில் இருந்து ஒய்வு பெற்ற பணியாளர்களின் விபரம்:

திரு. கே பாலகிருஷ்ணன், திருமதி எஸ். சிவலிங்கம், திரு. வே. இராசையா.

சிறந்த கிளை முகாமையாளர்கள்

திருவாளர்கள் எஸ். தங்கவேல், ஆர் ஜெயதாஸ், எஸ். சிவராசா.

# மக்கள் சேவையில் முன்னணி வகிக்கும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப்பொது முகாமையாளர் திரு கவிந்திரதாஸ் அவர்களுடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது

கேள்வி:- ஆரம்பகாலத்தில் சங்கத்தின் தொழிற்பாட்டிற்கும் சமகாலத்தில் சங்கத்தின் தொழிற்பாட்டிற்கும் ஏதாவது வேறுபாடு உண்டா?

பதில்:- ஆரம்பகாலத்தில் சங்கம் அதிகளவு விஸ்தீரணம் இல்லாதுவிடினும் வளர்ச்சிப் பருவத்தின் ஒவ்வொரு நிலையிலும் பாரிய இழப்புக்களை எதிர்நோக்கி வருகின்றோம் இதனால் சங்கம் பல பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றது. மேலும் எமது சங்கப்பரப்பு இராணுவமுகாம்களுக்கு அருகே அமைந்திருப்பதனால் ஏற்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள முடியாமையுள்ளது. உதாரணமாக 83-ம் ஆண்டு, 94-ம் ஆண்டு பிரச்சனைகளில் நாங்கள் அதிகளவில் பலமிழந்துள்ளோம் ஆனாலும் தற்போது அதிகளவில் கிளைச் சங்கங்களைக் கொண்டும் வாடகைச்சேவை, தொலைபேசிச் சேவை, உணவகம், மருத்துவச்சேவை போன்றவற்றைக் கொண்டும் அங்கத்தவர்களுக்குசேவைகளையும் எமது பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கி வருகின்றோம்.

கேள்வி:- வாடகைச் சேவை என்பதில் உங்கள் சேவை என்ன?

பதில்:- கதிரைகளை வாடகைக்கு விடுகின்றோம், லொறிவாடகைக்கு விடுகின்றோம், லொறிக்கு பயணம் செய்யும் கிலோ மீற்றர் அடிப்படையில் வாடகை அறவிடுகின்றோம்.

கேள்வி:- தற்போது நீங்கள் எத்தனை கிளைச் சங்கங்களை கொண்டுள்ளீர்கள்?

பதில்:- நாங்கள் 26 கிளைச் சங்கங்களைகொண்டுள்ளோம் அப்படியிருந்தும் கிளை அங்கத்தவர்கள்மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். அதிகளவில் கருத்தரங்குகளை நடாத்தியபோதும் கூட்டுறவு பற்றிய தவறான அபிப்பிராயங்களையே மக்கள் கொண்டுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்

கேள்வி:- உங்கள் சங்கத்தின் உற்பத்தி முயற்சி என்ன?

பதில்:- உற்பத்தி என்றவகையில் 94க்கு முன்னர் பேக்கரிகளை நடாத்தி வந்தோம் அவை வெற்றிகரமாக இயங்கி வந்தது, தற்போது பேக்கரி தொழிற்படுவதில்லை அதிகளவில் பேக்கரி இயங்குவதோடு உற்பத்தி மட்டங்களைவிட நுகர்வு மட்டங்கள் மிகக் குறைவாக இருப்பதனால் சந்தைப் படுத்துவது கடினமாக உள்ளதால் பேக்கரி பாண் உற்பத்திகளை இடை நிறுத்தி உள்ளோம்

சேவை மிகவும் வெற்றிகரமாகசெயற்பட்டு வருகின்றது. கிராம மக்கள் வைப்புக்கள் செய்தும் கடன்களை பெற்றும் சிறந்த முறையில் வங்கியின் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்கின்றனர் முந்நூற்று இருபதுக்கும் மேற்பட்டவர் பென்ஷன்கள் பணம் பெற்றுக்கொள்கின்றனர்.

மேலும் மருத்துவச் சேவைகளை வழங்குகின்றோம் இவ் வைத்திய சேவையில் வைத்தியர் ஒரு நோயாளியை பரிசோதிக்க 15/- ரூபாவே கட்டணமாக அறவிடுவது

> யுத்த காலச் சூழ்நிலையில் ஒவ்வொரு தடவையும் இழப்புக்குள்ளானாலும் நாங்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்தே வருகின்றோம் எனக் குறிப்பிடுகின்றார் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் த. கவிந்திரதாஸ் அவர்கள்.

மேலும் உணவகம் தற்போது நடத்தி வருகின்றோம் ஆனாலும் உணவகத்திற்கு வேண்டிய உணவை ஆரம்பத்தில் உற்பத்தி செய்து விற்பனை செய்தோம் அந்த நிலையில் மாதம் 25000/- இலாபத்தை உழைத்து வந்தோம், தற்போது இலாபம் மிகக் குறைந்த நிலையில் காணப்படுவதனால் உணவு வகைகளை மக்களிடம் வாங்கி விற்பனை செய்து வருகின்றோம். புடவை விற்பனை நிலையமும் நடத்தி வருகின்றோம்.

## நேர்காணல்

செல்விகள்:-
கிறிஷாந்தி சிவலிங்கம்
சாளினி அருள்ராசா
இதழியல் பயிற்சி மாணவிகள்
யாழ். மாவட்ட கூட்டுறவு சபை

கேள்வி:- எவ்வகையான அபிவிருத்தி முயற்சிகளை நீங்கள் செயற்படுத்தி வருகின்றீர்கள்?

பதில்:- பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகின்றோம் அதாவது எமது சங்க எல்லை பரப்புகளில்உள்ள பாடசாலைகளில் சித்தியடைந்த ஒவ்வொரு மாணவருக்கும் 500/- வழங்குகின்றோம்

இதனைவிட கிராமிய வங்கிச் சேவைகளை நடத்துகின்றோம் இச்

டன் பாமசியில் மிகக் குறைந்த விலையில் மருந்து வழங்கிவருகின்றோம்.

கேள்வி: அங்கத்தவர்களுக்கு நீங்கள் கடன்கள் வழங்குகின்றீர்களா?

பதில்:- ஆப்கூட்டுறவுக்கிராமிய வங்கியின் கீழ் பலவகையான கடன்களை வழங்குகின்றோம். செயற்திட்டங்களைப் பொறுத்து வழங்கப்படும் கடன்களின்அளவு வரையறுக்கப்படும்

கேள்வி :- வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களின் வரையறைகள் என்ன?

பதில்:- சங்கக்கிளையொன்றில்அங்கத்தவராக இருப்பதுடன் குறைந்தது 500/- பங்குப்பணமாக இருத்தல் வேண்டும். மேலும் எமது சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கினை வைத்திருப்பதுடன் அரசநிறுவனத்தில் பணிபுரியும் 2 உத்தியோகத்தர் மூலம் பிணை வைக்கப்படல் வேண்டும். ஆகக்கூடுதலாக 20000/- ஒரு அங்கத்தவருக்கு கடனாக வழங்கப்படுகின்றது. மாதம் 1000/- தவணைப்பணத்துடன் வட்டியும் சேர்த்து 20 மாதங்களில் கட்டி முடித்தல் வேண்டும்.

கேள்வி :- நீங்கள் இந்தக் கடன்களை வழங்குவதன் நோக்கம் என்ன?

பதில் :- மிகக் குறைந்த வட்டியுடனும் ஆள் பிணையுடனும் இலகுவாக

(8ம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவு இயக்கத்தின் பூரண வெற்றிக்கும் நல்லியக்கத்திற்கும் அவசியமான காரணிகளும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான முகாமைத்துவ உபாயங்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## பொருட்கழிவும் தாரைககழிவும்

கடந்த மாதக் கட்டுரையில் பொருட் சோர்வைப் பற்றியும் அதன் தாக்கத்தைப் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முகாமைத்துவ உபாயங்களைப்பற்றியும்விரிவாக ஆராய்ந்தோம்.

விற்பனை விநியோகத்திற்கென விற்பனை நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருட்கள் பழுதடைந்து விற்கமுடியாத நிலை ஏற்படும்பொழுது அவற்றை இருப்பெடுத்து பொருள் இருப்பிலிருந்து அவற்றைக் கழித்த விடுவதே பொருட்கழிவாகும்.

பொருட்கள் பொதிசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் சாக்கு, பை என்பன போன்ற வெற்றுப்பொருட்களின் நிறை பொருட்களின் நிறையுடன்,சேர்க்கப்பட்டிருப்பதால்பொருட்களின் தேறிய பெறுமதி வெற்றுப் பொருட்களின் நிறையால் குறைகின்றது: இக்குறைவே தாரைக்கழிவாகும்.

பொருட் சோர்வைப் போன்ற பொருட்கழிவும் தாரைக்கழிவும் ப. நோ. கூ. சங்கங்களின் இலாபத்தில் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலும் எல்லாப் ப.நோ கூ சங்கங்களிலும் மொத்த விற்பனையில் 0.5வீதத்திற்கும் 1வீதத்திற்கும் உட்பட்ட தொகை பொருட்கழிவாகவும் தாரைக்கழிவாகவும் விரயமாகின்றது யாழ்ப்பாணத்திற்கான கரைப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் கொழும்பில் கொள்வனவு செய்த பொருட்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வருவதில் ஏற்படுகின்ற தாமதத்தாலும் இடப்பெயர்வுகளால் அடிக்கடி விற்பனை நிலையங்களை மாற்ற வேண்டிய நிலை ஏற்படுவதாலும் இக்கழிவுகள் அதிகரித்து வருகின்றன சில ப நோ. கூ. சங்கங்களில் மொத்த விற்பனையில் 1 வீதத்திற்கு மேலும் இக்கழிவுகள் அதிகரித்தவையாகக் காணப்படுகின்றன.

இக்கழிவுகள் இரண்டையும் 0.5வீதத்திற்குமேற்படாமல்0 5வீதத்திற்கும் 0.25 வீதத்திற்கும் உட்பட்டதாக கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். சில தனியார் விற்பனை நிலைய உரிமையாளர்களுடன் இது பற்றி உரையாடிய போது தனியார் வர்த்தக நிலையங்களில் இக்கழிவு வீதங்கள் 0 5 வீதத்திற்கு உட்பட்டதாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இக்கழிவு இரண்டையும் மேற்படி கணிசமான வீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இக்கழிவு இரண்டையும் மேற்படி கணிசமான வீதத்தில் கட்டுப்படுத்த பின்வரும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

**இ. சுப்பிரமணியம்**
இளைப்பாறிய அதிபர் கூட்டுறவு அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணம்.

**பொருட் கழிவையும் தாரைக் கழிவையும் கணிசமான வீதத்தில் கட்டுப்படுத்துவதற்கான முகாமைத்துவ உபாயங்கள்.**

1 தேவைக்கு ஏற்ப திட்டமிட்ட பொருட் கொள்வனவு மூலம் பொருட் தேக்கத்தையும் பழுத்டைதலையும் தடுக்கலாம்

2 கொள்வனவு செய்யும் பொழுது தரமான பொருட்களையும் உற்பத்தி செய்து காலம் செல்லாத புதிய பொருட்களையும் கொள்வனவுசெய்ய வேண்டும். பொருட்கள் உற்பத்தி செய்த திகதியை அவதானித்துக் கொள்வனவு செய்ய வேண்டும்.

3 விற்பனைச்சுழற்சி கூடிய பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்ய வேண்டும். விற்பனைச் சுழற்சி குறைந்த இரும்பு வகைகள், பாத்திர வகைகள் புடவைகள் போன்றவற்றை அளவுக்கு அதிகமாகக் கொள்வனவு செய்யாமல் அளவாகக் கொள்வனவு செய்ய வேண்டும்.

4 விற்பனைச்சுழற்சியையும் இருப்புச் சுழற்சியையும் அதிகரிக்ககாட்சிப்படுத்தல் விளம்பரம்செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

5 பொருட்கள் பழுதடையாமல் இருப்பில் இருப்பதற்கான சகல பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவற்றையும் ஏற்படுத்த வேண்டும். கட்டிடப்பாதுகாப்பு தளபாட உபகரணப் பாதுகாப்பு என்பன ஏற்படுத்தப்பட வேண்டும்.

6 விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும், பொருட்களை விற்பனையாகக் கூடிய விற்பனை நிலையங்களுக்கு மாற்றுதல்.

7 விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும் பொருட்களை காலம் பிந்தாது உரிய காலத்திற்குள் கொள்வனவு செய்த நிறுவனங்களுக்குத் திருப்பி அனுப்புதல்.

8 பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது குறித்த நாட்களுக்குள் பொருட்கள் விற்பனை யாகாது விட்டால் திருப்பி அனுப்பப்படும் என்ற நிபந்தனையுடன் கொள்வனவு செய்தல்.

9 பொருட்களை ஏற்றி இறக்கும் பொழுதும் அளந்து, நிறுத்துவிற்கும் பொழுதும் பொருட்களைக் கொட்டுதல், பொருட்களைச் சிந்துதல், பொருட்களைப் பழுதடையச் செய்தல் போன்றவற்றை முற்றாகத் தவிர்த்து மிக அவதானத்துடனும் கடமை உணர்வுடனும் செயற்படுதல்

10 பழுதடைந்த பொருட்கள் மற்றைய பொருட்களையும்'பழுதடையச் செய்யாமல் தடுப்பதற்கு காலம் பிந்தாமல் பழுதடைந்த பொருட்களை இருப்பெடுத்து அகற்றி விட வேண்டும்.

(7ம்பக்கம் பார்க்க)

## கூட்டுறவு இயக்கத்தின்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

11 அகற்றிய பழுதடைந்த பொருட்கள் மீண்டும் மோசடிநோக்குடன் இருப்புக்குக் கொண்டுவருவதைத் தடுக்க பழுதடைந்த பொருட்களை முற்றாக அழித்து விட வேண்டும்.

12 நெறியாளர் குழுவால் நியமிக்கப்பட்டஒரு பொருட்கழிவுக்குழுவின் முன்னிலையில் பழுதடைந்த கழிவுப் பொருட்கள் இருப்பெடுக்கப்பட்டு நெறியாளர் குழுவின் அனுமதி பெற்றே கழிவு பொருட்களுக்குக் கழிவு வழங்கவேண்டும்.

13 கழிவு வழங்குவதற்கு கிளை ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் கழிவு ஏற்படும் வீதங்களை ஆய்வு செய்து கழிவு வழங்கும் நியமங்களை உருவாக்கி அதற்கமைய கழிவு வழங்கப் பட வேண்டும். காலத்திற்குக்காலம் சுவாத்திய கால நிலை மாற்றத்திற்கமைய இந்நியமங்கள் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

14 கிளை ரீதியாக ஏற்படும் கழிவு வீதங்களை நன்கு பரிசீலனை செய்து ஏற்க முடியாத கூடுதலான கழிவை ஏற்படுத்தும் பணியாளரை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

15 பொருட்களைப் பாதுகாத்தல் பொருட்களைக் கையாளுதல் பாதுகாப்பாக ஏற்றி இறக்குதல் பாதுகாப்பாக இருப்புவைத்தல் போன்ற துறைகளில் பணியாளர்களுக்குப் போதிய பயிற்சி கொடுக்கப்படவேண்டும்.

16 தாரைக்கழிவு வழங்கும் பொழுது கழிவுக்குழு முன்னிலையில் தேவையான வெற்றுப்பொருட்களை இருப்பெடுத்து நிறுத்து அதற்கமைய தாரைக்கழிவு வழங்கப்பட வேண்டும்.

17 வெற்றுப்பொருட்களின் நிறையில் மோசடி நோக்குடன் ஏதாவது நிறை அதிகரிப்புகள் செய்யப்பட்டுள்ளதா என்பது ஒப்பீட்டுரீதியில் ஒப்பிட்டுப்பரிசிலனைசெய்துநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

18 விரைவில் பழுதடையக்கூடிய பொருட்களைப் பாதுகாப்பாகப் பொதி செய்து விற்றல் மூலமும் பழுதடைதலையும் கழிவையும் கட்டுப்படுத்தலாம். உணவுப்பண்டங்களையும், குளிர்பானங்களையும் குளிரூட்டல் பாதுகாப்புப் பெட்டியில் பாதுகாத்து வைத்தல்மூலம் பழுதடைதலையும், கழிவையும் கட்டுப்படுத்தலாம்.

### வெற்றுப்பொருள் விற்பனையை அதிகரித்தல் :

ப. நோ. கூ. சங்கங்களின் இலாபத்தை அதிகரிக்கும் துறைகளுள் வெற்றுப் பொருள் விற்பனை முக்கிய இடத்தினைப் பெற்று விளங்குகின்றது. பொருட்களை அடைத்தோ, பொதிசெய்தோ வரும் பொருட்களான சாக்கு பை, பெட்டிகள் எண்ணெய்பரல்கள்போன்ற பொருட்களே வெற்றுப் பொருட்களாகும். இப்பொருட்களைப் பாதுகாப்பாக பேணிச் சேகரித்து களஞ்சியப்படுத்தி தகுந்த முறையில் விற்பதன் மூலம் பெருமளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனையில் 2 வீதத்திற்கும் 1 வீதத்திற்கும் இடைப்பட்ட தொகையை வெற்றுப் பொருள்விற்பனையால்பெற முடியும். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பணியாளர்களின் மாதச் சம்பளத்தில் பெரும்பகுதியை இவ் வெற்றுப் பொருள் விற்பனை ஈடு செய்யக் கூடியதாக இருந்தது. இன்று வெற்றுப் பொருட்களின் இனத்திலும் தரத்திலும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களினால் இவ் வெற்றுப் பொருள் விற்பனை மொத்த விற்பனையில் கிட்டத்தட்ட 0.5 வீதமான தொகையால் குறைந்த போதிலும் பின்வரும் முகாமைத்துவ நடவடிக்கைகளை ப.நோ.கூ. சங்கங்கள் மேற்கொள்ளுவதன் மூலம் வெற்றுப் பொருள் விற்பனையை அதிகரித்துக்கொள்ளலாம். இந்நடவடிக்கைகளை எல்லாப் ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களும் தவறாது எடுக்க வேண்டியது மிக அவசியமாகும்.

### வெற்றுப் பொருள் விற்பனையை அதிகரிப்பதற்கான முகாமைத்துவ உபாயங்கள் :-

1 பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொழுது பழுதடையாத தரமான வெற்றுப் பொருட்கள் உள்ள பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

2 பொருட்களை ஏற்றி இறக்கும் பொழுதும் களஞ்சியப்படுத்தும் பொழுதும் பழுதடையாமல், கிழியாமல் பாதுகாப்பாகக் கையாள வேண்டும்.

3 பொருட்களைக் கிளை நிலையங்களுக்கு விநியோகிக்கும் போது கிளை நிலையப் பொறுப்பாளர்கள் தரமான வெற்றுப் பொருட்களை எடுத்து விட்டு தரமற்ற வெற்றுப் பொருட்களை உள்படுத்தி வெற்றுப் பொருட்களை மோசடி செய்யாதவாறு வெற்றுப் பொருட்களை மாற்ற முடியாதவாறு அடையாள முத்திரை இட்டு வழங்கல்,

4 வெற்றுப் பொருட்களில் பொறிக்கப்படும் இவ்வடையாள முத்திரையை எவரும் தவறாகப் பயன்படுத்தாதவாறு தக்க பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

5 வெற்றுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் விற்பனை செய்த வெற்றுப்பொருட்களில் உள்ள பழுதடைந்த பொருட்களை கிளைப் பொறுப்பாளர்கள் பெற்று அவற்றை வெற்றுப் பொருள் இருப்புக்கு உட்படுத்தி தரமான வெற்றுப் பொருட்களை மாற்றி மோசடி செய்வதைத் தடுப்பதற்கு வெற்றுப் பொருட்கள் விற்பனை செய்த பின்னர் வெற்றுப் பொருட்களுக்கான அடையாள முத்திரைகளை மாற்றியமைக்கவேண்டும்.

6 வெற்றுப் பொருட்களுக்கான இருப்புக் கணக்கு ஒழுங்காக வைக்கப்பட வேண்டும். வெற்றுப் பொருட் படிவங்களான படிவங்கள் நாளாந்தம் ஒழுங்காகத் தயாரித்து தலைமைக் காரியாலயத்தால் பரிசோதனை செய்து தவறுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7 வாராந்தம் கிளைகளிலுள்ள வெற்றுப் பொருட்கள் ஒழுங்காகச் சேகரித்துப் பரிசோதனை செய்து ஒரு மத்திய வெற்றுப் பொருள் களஞ்சியத்தில் பாதுகாப்பாகக் களஞ்சியப் படுத்தப்பட வேண்டும்.

8 களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள வெற்றுப் பொருட்கள் யாவும் தரத்திற்கும் இனத்திற்கும் ஏற்ப ஒழுங்காகத் தரம் பிரிக்கப்பட வேண்டும்.

9 வெற்றுப் பொருட்களில் ஏதாவது பழுது, உடைவு, சேதம் இருந்தால் அவை விற்பனை செய்யப்படுவதற்கு முன்னர் திருத்தம் செய்யப்பட வேண்டும். உதாரணமாக கிழிந்த சாக்குகள் இருந்தால் அவை தைத்துத் தரமான பொருட்கள் ஆக்கப் பட வேண்டும்.

10 வெற்றுப் பொருட்களை விற்பனை செய்யும் பொழுது முத்திரையிட்ட கேள்விக் கூறுகளைக் கோரி குறைந்த கேள்விக் கூறுகளைச் சமர்ப்பிப் போருக்கு வெற்றுப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும்.

11 வெற்றுப் பொருட்களை கேள்விக்கூறு கோரி விற்பனை செய்வதிலும் பார்க்க வெற்றுப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றை நிறுவி அதில் வெற்றுப் பொருட்களைச் சில்லறை விலைக்கு விற்பதன் மூலம் வெற்றுப் பொருள் விற்பனையை அதிகரிக்கலாம்.

# பெண்ணியபேரழிவும்பெண்களுக்கானசட்டவிதிகளும்

தற்கால சூழ்நிலையில் பெண்கள் அவசியமான சட்டங்கள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். இப்பொழுது நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளில் பெண்களே சம்மந்தப்பட்டுள்ளமையைக் காணலாம். பெரும்பாலும் விவாகரத்து, தாபரிப்பு வழக்குகள் கசிப்பு விற்பனை வழக்குகள் என்பனவாகவே உள்ளன.

இன்றைய நிலமையில் பெண்களின் நிலை மிகவும் மோசமடைந்து வருவதனைக் காணலாம். ஒழுக்கச் சீர்கேடுகள் காரணமாக கன்னித்தாய்மார்கள் மலிந்து காணப்படுகின்றனர் இவற்றில் அதிகமானோர் 14 வயது தொடக்கம் 20 வயதிற்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர் திருமணமாகாமலே தப்பான உறவு கொளவதும பின்னர் குழந்தை உருவாகியதும் கருவைக் கலைப்பதற்கு ரகசியமாக வைத்தியரை நாடுவதும் இன்று நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது இதனை இயன்றவரை குறைத்து எமது பண்பாடு கலாச்சாரங்களைப் பேணிக் கொள்வது இன்றைய இளம் பெண்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இன்று நீதிமன்றங்களிலே விவாகரத்து வழக்குகளே அதிகமாக நடைபெற்று வருவதைக் காணலாம் கணவன் மனைவிக்கிடையே நடைபெறும் சிறு பிரச்சனைகளைக் காரணம் காட்டி விவாகரத்து வழக்கினைத் தொடுக்க முடியாது. திருமணமாகி கணவன் வேறு பெண்ணுடன் கூடி வாழ்தல், மனைவி குழந்தைபெற தகுதியற்றவள், ஆணோ பெண்ணோ அற்ற நிலை எனக் கண்டறியப்படல் போன்ற காரணங்கள் என்றால் மட்டுமே விவாகரத்து வழக்கினைத் தொடுக்க முடியும் திருமணமாகாமல் குழந்தையைப் பெற்றபின் ஒருவன் தனக்கும் அந்தப்பெண்ணுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனக் கூறினால் அந்தப்பெண் தனக்கு சாதகமான சாட்சிகளை சமர்ப்பித்தால் மட்டுமே நீதிமன்றம் அவ்விருவரையும் சேர்த்து வைக்கும்.

சி. சத்தியவாணி
இதழியல் பயிற்சியாளர்.
யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை.

நீதிமன்றில் அடுத்து அதிகமாக இடம்பெறும் வழக்கு தாபரிப்பு வழக்காகும். சட்டபூர்வமாக திருமணம் நடைபெற்று கணவன் பராமரியாமல் விட்டால் தாபரிப்ப வழக்கு செல்லுபடியாகும்.

கசிப்பு வழக்குகளை எடுத்துக் கொண்டால் ஆண்கள் கசிப்பு காய்ச்சி விற்பனையில் ஈடுபடுவதும் வழக்குகளின் போது பெண்கள் தாமே குற்றச்சாட்டினை ஏற்றுக்கொண்டு வழக்குகளிற்குச் செல்வதனையும் காண முடிகின்றது. இதற்குக் காரணம் பெண்களுக்கென்றால் நீதிமன்றம் குறைந்தளவு தண்டனையே வழங்கும் என்ற ஓர் தப்பான அபிப்பிராயமாகும். பெண்களுக்கென்று எவ்வித சலுகையினையும் நீதிமன்றம் வழங்காது. அவர்கள் செய்யும் குற்றத்தினைப் பொறுத்தே தண்டனைகளை வழங்கும். மறியலானது கடும்மறியல் 5000/ குற்றப்பணமும் 6 மாத மறியலும், இரண்டு வருட கடூழிய மறியல் ஆனால் ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட மறியல் என பல வகைப்பட்டது இதில் கசிப்பு விற்பனையில் ஈடுபடுவோருக்கு குற்றப் பணத்தினைப் பெற்றுக்கொண்டு 6 மாதகால மறியலும் வழங்கப்படும்

இன்று வீதிகளிலே துவிச்சக்கர வண்டிகளை வரிசையில் ஓட்டிச்செல்வதும் பின்னே வருகின்ற வாகனங்களின் சமிக்ஞை ஒலியினை அலட்சியம் செய்து நடப்பதுவும் பாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவற்றிலும் பெரும்பாலும் பெண்களே ஈடுபடுவதைக் காணமுடிகின்றது. எனவே பெண்கள் சட்டத்தினை மதிப்பதிலும் தமது கலாச்சாரங்களைப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்தி பெண்ணின் பெருமைக்கு இழுக்கு ஏற்படாது நடத்தல் அவசியமாகும்.

## மக்கள் சேவையில்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பிச் செலுத்தும் நிபந்தனையுடனும் சுழற்சி முறையில் வழங்கி சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் எமது அங்கத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டே கடன்கள் வழங்குகின்றோம்.

கேள்வி:- நிவாரணமா, காசு விற்பனையா அதிகளவில் இடம் பெறுகின்றது?

பதில்:- எமது பிரதேசம் கிராமமாகக் காணப்படுவதுடன் வறிய மக்களாக இருப்பதனால் நிவாரணம் எமது கிளையில் 25 வீதமும் 75 வீதமும் காசு விற்பனைகளாகக் காணப்படுகின்றது. ஆனாலும் நிவாரணம் குறைக்கப்பட்ட நிலை ஏற்பட்டாலும் மக்கள் தனியார் கடைகளை விட சங்கங்களில் வாடிக்கையாளராக இருப்பதால் தொடர்ந்தும் எமது சேவையை மேற்கொள்ள முடியும்.

கேள்வி :-மகளிர்களுக்கு பயிற்சி நெறி ஏதும் வழங்குகின்றீர்களா ?

பதில் ;- ஆம்.

முதலுதவி முகாமைத்துவம் மனையியல் அடிப்படைப் பயிற்சிகள் வழங்குகின்றோம். மகளிருக்கு வழங்கும் மனையியல் அடிப்படைப் பயிற்சிக்கு 100,000/- வரை செலவு எமக்கு ஏற்படுகின்றது நாம் இப் பயிற்சி நெறியினை ஒன்று விட்ட ஒருவருடம் வழங்கிவருகின்றோம்.

கேள்வி:- நீங்கள் ஊழியர்களுக்கு எவ்வகையான ஊக்குவிப்புக்கள் வழங்குகின்றீர்கள்?

பதில் :- அதிகரித்த இலாபம் ஏற்படும் பொழுது இலாபத்தில் 20% அல்லது ஒரு மாதச் சம்பளம் அதில் எது குறைவோ அதை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படியாக வழங்குதல். மேலும் சம்பள அதிகரிப்புக்கள் சம்பளங்களில் பாக்கி இன்மை போன்றவற்றையும் மேற்கொண்டு வருகின்றோம்.

கேள்வி: உங்கள் கிளைச்சங்கங்களின் பரந்த சேவை என்ன ?

பதில் நுகர்வுப்பொருள் விற்பனை ஒப்பந்தசேவைகள் உலர்உணவுப்பொருள் வழங்கல், கல்விசேவை, புடவை விற்பனை, வங்கிச்சேவை உரம் கிருமிநாசினி விநியோகம். வாடகை கதிரை கோழித்தீன் விநியோகம் மகளிர் மனைப் பொருளியல் சேவை எரிபொருள் விநியோகம் மருத்துவச் சேவை கட்டிடப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை சேவைகளாக மேற்கொள்கின்றது.

# வன் செயலினால் பாதிக்கப்பட்ட பெண்களை அபிவிருத்தி செய்தல்

உலக நாடுகளில் தற்போது பெண்களுக்கான பல அமைப்புக்கள் தோன்றி அவர்களின் அபிவிருத்தி பற்றி பல நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் எடுத்து வருகின்றன ஐக்கிய நாடுகள் சபையில்பெண்களின் அபிவிருத்திபற்றி பல விடயங்கள் ஆராயப்படுகின்றன. அத்துடன் சர்வதேச ரீதியில் மகளிர் மகாநாடுகளை நடாத்துவதன் மூலம் பல தீர்மானங்களை எடுத்து வருகிறது. மகளிரின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஐக்கிய நாடுகள் சபை மகளிர் ஆண்டை பிரகடனப்படுத்தியது.

இலங்கையைப் பொறுத்தவரை தற்காலத்தில் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை காரணமாக பெண்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் 59 சதவீதமான குடும்பங்கள் பெண்களை தலைவியாக கொண்டிருப்பவையாக உள்ளன, இவர்கள் தலைமைப் பொறுப்பைஏற்றுக்கொள்கின்ற குடும்பங்களின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையும் கூடுதலானதாக உள்ளதாகவும் ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பெண்கள் குடும்பத்தின் தலைமையை ஏற்பதற்கு அல்லது குடும்ப நிலைமை அவர்கள் மேல் சுமத்தப்படுவதற்கு பல காரணிகள் ஏதுவாக அமைகின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களை எடுத்துக் கொண்டால் வன் செயல்களினால் கணவன் இறத்தல், காணாமல் போதல், கைது செய்தல் நீண்டகாலம் தடுத்து வைத்தல், அங்கவீனமாதல், இயற்கை மரணம் மற்றும், வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புத் தேடி செல்லுதல், வெளியூர்களில் வேலைசெய்தல் முதலிய காரணிகளாலும் பல குடும்பங்களின் தலைமையை பெண்கள் சுமக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கலாச்சார சீரழிவுகளினாலும் மாறிவரும் மனப்பாங்குகளினாலும் பிரிந்துவாழும் குடும்பங்கள், பெற்றோரை உழைக்கும் வலுவுள்ளவர்களை இழந்த குடும்பங்களில் பெண்களே குடும்பத் தலைவியாக மாறிவருகின்றனர்.

வெளிநாட்டுக்கு ஆண்கள் வேலை தேடிச் செல்லுதல், மற்றும் வன் செயல்கள், யுத்தங்களில் இறத்தல் முதலிய காரணிகளால் ஆண்களின் எண்ணிக்கை குறைந்து செல்கின்றது பெண்களின் ஆயுட்காலமும் ஆண்களைவிட 4-5 வருடங்கள் அதிகமாகவே உள்ளன. ஆண் ஆயுட்காலம் 72வயது வரையும் பெண்களின் ஆயுட்காலம் 76 வயது வரையும் உள்ளது என்று அண்மைக்கால ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

---


கருத்துரை :-

**திரு. வ. சத்தியசிலன்**

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பிரதேச செயலகம் தெல்லிப்பழை.

தொகுப்பு:- **நா. இராஜமலர்**

இதழியல் பயிற்சி மாணவி


---

1960 - 70 களில் யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்குரிய தலைமைத்துவ சந்தர்ப்பங்கள் அதிகமாகவே இருந்தன. 1980 களின் பின் பல்வேறு காரணிகளின் தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்தகுடும்பங்களின் தலைமை பெண்களின் கைக்கு மாறியுள்ளது: அதுவும் 30 - 59 வயதுக்குள் உள்ள பெண்களே குடும்ப தலைமை, ஏற்கும் குடும்பங்கள் அதிகமாகவும் உள்ளன. இவ்வாறு இடைப்பட்ட வயதில் அவர்கள் தனது பிள்ளைகளை, பெற்றோரை, சில சந்தர்பங்களில் கணவரை பராமரித்தல் அவர்களுக்கான இதர பணிவிடைகளுடன் குடும்பத்திற்கான பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்ள வேண்டிய இரட்டைச் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்: அத்துடன் சமுதாய சீரழிவுகளுக்குள் சிக்கித்தவிக்கின்ற அவல நிலையும் ஏற்பட்டுள்ளது

இடப் பெயர்வுகளால் முகாம் வாழ்வு. குடும்பத் தலைவன் வெளிநாடு செல்லுதல் நவநாகரிகமோகம் முதலிய தற்கால நடைமுறை சிக்கல்களினாலும் கலாச்சாரச் சீரழிவுகள் ஏற்பட்டு இளம் சமுதாயத்தைப் பாதித்து வருகின்றன. உதாரணமாக 18 வயதின் பின்ப அமைந்த திருமண வயது தற்போது 14 - 15 வயதிற்கு மாறிவருவதால் 2-3 பிள்ளைகளுக்கு தாயாகி வாழும் நிலையும் மனப்பக்குவமற்ற வயதில் திருமணம் செய்வதனாலும் திருமண முறிவுகளாலும் மற்றும் ஒருவர் வெவ்வேறு இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்து அம்பெண்களின் வாழ்வை அவல நிலைக்கு தள்ளுவதும், இடப்பெயர்வுகளின் மூலமான முகாம் வாழ்வில் இன்று அதிகமாக நிகழ்கின்றது. இதனை நாம் அன்றாடம் நீதிமன்றங்களில் நடக்கும் ''தாபரிப்பு'' வழக்குகளில் இருந்து அறிந்து கொள்ளமுடிகிறது.

இவ்வாறான எல்லாவற்றையும் மாற்றி அமைத்து ஒரு புத்தி ஜீவியான சமுதாயத்தை உருவாக்க வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றான தேவையாக இன்று உள்ளது. பெண்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத்தக்க கூடிய பட்சத்தில் எமது எதிர்கால சமுதாயமானது ஒரு கட்டுக்கோப்பற்ற கலாச்சார சீரழிவுகளை கொண்ட ஒரு தான் தோன்றித்தனமான, புத்திஜீவியற்ற ஒரு சமுதாயமாகவே திகழும் என்பது மறுக்க முடியாத உண்மையாக அமைந்துவிடும்.

எனவே இவற்றை எல்லாம் மாற்றி அமைத்து எதிர்கால சந்ததியை வளமுள்ள தூரநோக்குள்ள ஆரோக்கியமான நற்சிந்தனையுள்ள சமுதாயம் ஒன்றை உருவாக்க நிறுவனரீதியான அமைப்புக்கள் மூலம் ஒன்றுபட்டு தமது மேம்பாட்டுக்கான இலக்கை அடைய முயற்சிக்க வேண்டியது இன்றைய பெண்களின் பாரிய பொறுப்பாகும்.

சர்வதேச ரீதியாக பெண்களுக்கான அமைப்புகளை நிறுவி ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் பல்வேறுபட்ட நெருக்கீடுகளுக்கிடையில் சிக்கித் தவித்து மாண்டுபோகாது அவர்களை காத்து அபிவிருத்தி அடையச்செய்ய வேண்டும். அத்துடன் தான் ஏற்றுக் கொண்ட பணியை சிறப்பாகச் செய்வதற்காக அவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், மற்றும் தலைமைத்துவபண்புகளையும் வளர்த்தெடுப்பதன் மூலம் அவர்களின் அபிவிருத்திக்கான வாய்ப்புகளை இனங்காண முடியும் மிகவும் முக்கியமாக அவர்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதை 'நோக்காகக் கொண்டு சிறந்த திட்டங்களை உருவாக்கி நடைமுறை படுத்தும் போது தான் மிகவும் வினைத்திறனான பயனை பெற முடியும் என்பதில் ஐயம் இல்லை

நாடுகளைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்

## நேபாளம்

உலகிலேயே இந்து மத கலாச்சாரத்தை கொண்ட ஒரேஒரு இந்துக்களின் நாடு நேபாள மாகும். இந்து பரம்பரை மன்னராட்சியும் நடைபெற்று வருகின்றபோதும் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியும் நடைபெற்று வருவது டன் பாராளுமன்றமே அதிகளவு அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

நேபாளம் இந்தியாவின் வட எல்லையில் மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ள நாடாகும். இது விவசாய நாடாக இருந்த போதும், மரக்கைத் தொழிலுக்கு பெயர் போனநாடாகவும் விளங்குகிறது.

- தலைநகரம் - காத்மண்டு
- பரப்பளவு - 147,181 சதுர கி. மீ.
- மக்கள்தொகை - 20.9 மில்லியன்
- கல்வி அறிவு - 27 %
- தலாவருமானம் - 180 S
- ஆயுட்காலம் - 54
- நாணயம் - நேபாள ருப்பியன்
- மக்கள்இனம் - குருக்காஸ் இனத்தினர்
- அரசாங்கமொழி- நேபாளி - நேவாளி
- பிறமொழிகள் - 11 மொழிகள்
- சமயம் - இந்து, பௌத்தம்
- உற்பத்திப் பொருள்- உபஉணவுப்பொருள் உற்பத்தி, மரப் பொருள் உற்பத்தி

## பன்னாட்டுப் பழமொழிகள்

- பணமும், சந்தோஷமும் ஜென்மவிரோதிகள்; ஒன்று தங்குமிடத்தில் இன்னொன்று தங்காது. - பிலிப்பைன்
- தேவையற்றதை வாங்காதே: தேவையானதை விற்காதே. - அமெரிக்கா
- முன்னேறாதிருப்பது பின்னடைவதேயாகும். - இலத்தீன்
- குற்றத்தை மன்னித்து விடலாம்: துரோகத்தை மன்னித்துவிடமுடியாது. - ஈரான்
- தாய்க்கு உதவாதவன் யாருக்கு உதவுவான். - இந்தியா
- கோபத்தால் செத்துப்போ; வழக்காடாதே! பசியால் செத்துப்போ ; களவு செய்யாதே! - சீனா
- பணமிருந்தால் உன்னை உனக்குத் தெரியாது; பணமில்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது - ஸ்பெயின்
- உள்ளே நுழையும் முன் வெளியேவருவதைப்பற்றிச் சிந்தனை செய். - அரேபியா

## நினைத்தவாறு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

*கலவை செய்வது ஆபத்தானது*

பல பீடை நாசினிகளை ஒன்றாகக் கலவை செய்யும் போது ஒவ்வொன்றிலும் தனித்தனியே எதிர்பார்க்கும் பலனைப் பெறமுடியாது சில வேளைகளில் ஒவ்வொன்றும் வித்தியாசமான முறைகளில் தொழிற்படலாம். நீங்கள் ஒன்றாகக் கலவைசெய்யும் நாசினிகளைப் பொறுத்து அவற்றிற்கிடையேயான இடைத்தாக்கம் வேறுபடும். சில வேளைகளில் ஒரு நாசினி மற்றைய தன் வினைத்திறனை அதிகரிக்கலாம்.

*பௌதீக கலவை ஒன்றாக சேராமை*

சில வேளைகளில் இரசாயனங்களை ஒன்றாகச் சேர்க்கும் போது அவற்றின் பௌதிக தன்மை காரணமாக அவை ஒன்று சேராது உதாரணமாக களை நாசினிக் கலவையை குறிப்பிடலாம். புற்களை புரோபனில் என்னும் நாசினி கட்டுப்படுத்தும் அகன்றஇலைக்களைகளைஎம் சி பீ ஏ கட்டுப்படுத்தும். எனவே இவ்விரண்டு புல்லினங்களையும் ஒரே தடவையில் கட்டுப்படுத்த விரும்பும் விவசாயி ஒருவர் இவற்றை கலவை செய்யும் போது பிரச்சினை ஏற்படலாம். இவ்விரண்டு நாசினிகளும் அவற்றின் பௌதிகத் தன்மையில் வேறுபட்டவையாகும் எனவே இவை ஒன்றாகக் கலக்காது இதன் விளைவால் ஒரிடத்தில் அதிகளவான எம் சி பீ ஏ விசிறப்படுவதோடு மற்றைய இடத்தில் அதிகளவான புரோபனில் விசிறப்படும். இதன்விளைவாக நெற்பயிர் மோசமாகப் பாதிக்கப்படும். தெளிகருவியில் உள்ளகலவை செய்யும் பகுதி முறையாக இயங்காவிடில் நிலமை இன்னும் மோசமானதாகமாறும்.

*சட்டப்படி கலவை செய்ய முடியாது*

விவசாயத்திணைக்களம் இவ்வாறு நினைத்தவாறு நாசினிகளைக் கலவை செய்வதில்லை இதனை பல முறை தெரிவித்தும் விவசாயிகள் கவனத்தில் கொள்வதில்லை சட்டப்படி இவ்வாறு கலவை செய்வது குற்றமாகும். பீடை நாசினிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் இவ்வாறானவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்.

*திரவப் பசளைகளுடன் சேர்த்து விசிறுவதால்*

திரவப்பசளை, பீடை நாசினிகளுடன் சேர்த்து விசிறுவது ஆபத்தானதென உற்பத்தியாளர்கள் எச்சரித்துள்ளனர் எனவே நீங்கள் நினைத்தவாறு ஒன்றாக கலவை செய்ய வேண்டாம் ஆலோசனையைப் பெற்று செயற்படவும்.

# பொது அறிவு- GENERAL KNOWLEDEG

## உடற்கல்வி சம்பந்தமானவை

1. விளையாடும் போது ஏற்படும் பிரதான விபத்துக்கள் எவை?
 i) மோதும் போது ஏற்படும் விபத்து
 ii) சுய தூண்டலினால் ஏற்படும் விபத்து
 iii) கூடிய பயிற்சியினால் ஏற்படும் விபத்து
 iv) சிகிச்சையளிக்கும்போது ஏற்படும் விபத்து

2. விளையாடும் போது ஏற்படக்கூடிய எளிய விபத்துக்கள் எவை?
கீறல், வெட்டு, உராய்வு, குத்துதல், அமிழ்த்தல், கழருதல், உடைதல், நசிதல், நெரிவு வெடிப்பு, இழுபடல், சுளுக்கு, மயக்கம், பிடிப்பு (தசை), களைப்பு, வேதனை.

3. இப்படியான எளிய விபத்துக்களின் போது அளிக்கக் கூடிய முதலுதவி எது?
 i) குருதிப் பெருக்கைத் தடுத்தல்
 ii) கிருமிகள் உட்செல்லாது தடுத்தல்
 iii) காற்றுக் கிடைக்க வழி செய்தல்

4. மோதுவதால்ஏற்படும்விபத்துக்கள் எவை?
 i) உடைவு, வெடிப்பு, மூட்டுவிலகல்
 ii) தசைகளில் குருதி உறைதல்
 iii) இணைப்புக்களில் ஏற்படும் விபத்து

5 கூடிய பயிற்சியின் போது விபத்து எப்படி ஏற்படுகிறது?
அதிக பயிற்சியில் ஈடுபடும் போது விரைவாக தசை சுமை கூடுவதால் கலங்களுக்கு வேலைப்பளு ஏற்படுகிறது இதனால் விபத்து ஏற்படுகிறது.

6) சிகிச்சையின் போது ஏற்படும் விபத்து யாது?
 i) பிழையான அறிவுறுத்தலினால்
 ii) பதற்ற மடைவதால்
 iii) பயிற்சியற்றவர்களால் சிகிச்சை ।யளிப்பதனால்

7. எளிய விபத்துக்கான சிகிச்சை ( RICE ) எனப்படுவது யாது?
R - Rest ஓய்வு
I - Ice குளிர்ச்சியை ஏற்படுத்தல்
C - Compression இறுக்கமாக கட்டுத் துணியை கட்டுதல்
E - Eliva tıon காயமடைந்த பகுதியை உயரத்தில் வைத்தல்

8. கடுமையான விபத்துக்கு செய்யக் கூடிய சிகிச்சைகள் யாது?
 i) முதலுதவி (அவசர சிகிச்சை)
 ii) மட்டைவைத்துக் கட்டுதல்
 iii) வைத்தியசாலைக்கு உடன் எடுத்துச் செல்லல்

9. விளையாட்டு நிகழ்ச்சிக்கு முன் ஏன் உடலை உஷ்ணப்படுத்த வேண்டும்?
விபத்துக்களில் இருந்து தவிர்த்துக் கொள்ளவும் அடைவுச் சாதனை மட்டத்தினை உயர்த்தவும். உடலை உஷ்ணமாக்க வேண்டும்.

10. விளையாடும்போது விபத்து ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?
 i) விளையாட்டு மைதானத்தில் உள்ள தடைகள் OR குறைபாடுகள் காரணமாக
 ii) விளையாட்டு விதிமுறைகளை சரியாகப் பயன்படுத்தாது விளையாடுதல்
 iii) விளையாடுவதற்கான பொருத்தமான பாதணி, உடைகள் பயன்படுத்தாமை
 iv) பொருத்தமற்ற உபகரணங்களை கையாளுதல்
 v ) திட்டமிடாத பயிற்சி ஒழுங்கு
 vi ) தகுந்த வழிகாட்டல் இல்லாமை
 vii ) பிழையான பயிற்சி முறைகள்
 viii) தேவைக்கதிகமாக வீணே களைப்படைதல்
 ix) ஓய்வு பயன்படுத்தாமை

11. விளையாடும் போது விபத்துக்களை எப்படித் தவிர்க்கலாம்?
 i) விளையாட்டு நிகழ்ச்சிகளை திட்டமிட்டு ஆயத்தம் செய்தல்
 ii உடலை உஷ்ணப்படுத்துவதுடன் செயற்பாடுகளுக்கு தேவையான உடற் தகமையைப் பெறல்
 iii) தேவையான அளவிற்கு பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபடல்
 iv) விளையாட்டு விதிமுறைகளை கடைப்பிடிப்பதுடன் உரிய முறையில் உபகரணங்களைப் பாவித்தல்
 v) பயிற்சியாளர்களின் வழிகாட்டலுக்கு அமைவாக பயிற்சிகளில் ஈடுபடல்

தொகுப்பு;-

பெரியதம்பி இராஜமனோகரன்
கல்வி உத்தியோகத்தர் கட்* நெல். ப.நோ, கூ.சங்கம் கரவெட்டி.

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87



## சாதாரண மக்களிடம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட மூவர் இச் சங்கத்தின் இயக்குநர்களாக இருந்து திறம்பட செயற்பட்டு வருகிறார்கள். இவர்களது அயராத உழைப்பினால் இச் சங்கம் மேன் மேலும் வளர்ச்சி பெற்று வருகின்றது என்று கூறினார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எஸ். செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:

தீவுப்பகுதிமக்கள் போக்குவரத்தில் அனுபவிக்கும் கஷ்டங்கள் தீர்க்கப்பட வேண்டும். குடிநீர்ப்பிரச்சினை உணவுப் பிரச்சினை ஆகியவற்றை மனிதநேய உணர்வுடன் போக்குவதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இன்றைய விழாவில் தீவுப்பகுதி மக்களின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்யக் கூடிய திணைக்கள அதிகாரிகள் யாவரும் சமூகமளித்திருப்பதால் ப்பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதவி அரசாங்க அதிபர் என்ற வகையில் இவற்றை நிறைவேற்ற எனது முழுப்பங்களிப்பையும் வழங்க வேண்டுமென்று கூறினார்.

வேலணை பிரதேச செயலர் திரு. செ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

தீவுப்பகுதி மக்கள் இடப்பெயர்வுகளினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதனால் அவர்களது அத்தியாவசிய தேவைகளான உணவுப்பிரச்சனை குடிநீர்ப்பிரச்சனை, போக்குவரத்துப் பிரச்சினை சுகாதாரப்பிரச்சனை, ஆகியவற்றுக்கு உடனடியான தீர்வுகாணப்பட வேண்டும். இவற்றுக்கான தீர்வில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளருமானதிரு. ந. மதனராசா வேலணை பிரதேச சபைத்தலைவர் திரு. த. கருணாகரமூர்த்தி, யாழ். மாவட்ட விவசாய கூட்டுறவுசமாசத்தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். நாகேஸ்வரன் கிராமிய வங்கி முகாமையாளர் திரு. பூ. சிறிகாந்தன் சங்க நெறியாளர் திரு. ஆ. பொன்னம்பலம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

சங்க உபதலைவர் திரு. எஸ். கே. சண்முகலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கூட்டுறவு தீபம் நூலினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். கே. சண்முகநாதன் வெளியிட்டு வைக்க தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு த. தவராசா பெற்றுக்கொண்டார்.

சங்கப் பொதுமுகாமையாளர் செல்வி. செ. எ. செல்வவதனா நன்றியுரை கூறினார்.

## ஐக்கியநாடுகள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

iii) பொருளாதார சமூக சபை:
பொருளாதர சமூக, பன்பாட்டு, மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து பொதுச்சபைக்கு தகவல் தரும் அமைப்பு இது. பொதுச்சபையின் 2/3 பங்குஉறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 54 உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகின்றது.

iv) தர்மகர்த்தா சபை:- குடியேற்ற ஆட்சியிலிருக்கும் நாடுகளைச் சுதந்திரத்திற்கும் சுயாட்சிக்கும் தயார் செய்வதில் இச்சபை ஈடுபடுகின்றது.

v) சர்வதேசந்திமன்றம்:- சர்வதேச சட்டப்பிரச்சினைகளைத்தீர்த்துவைப்பதற்கு ஏற்பட்ட இவ் அமைப்பின் விதிமுறைகளுக்கு ஐ. நா. உறுப்பினர் நாடுகள் கட்டுப்பட்டவையாக உள்ளன. 15 நீதிபதிளைக் கொண்டுள்ள சர்வதேச நீதிமன்றுக்கான நீதிபதிகள் பொதுச்சபையாலும் பாதுகாப்பு சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். இது "நெதர்லாந்து" நாட்டின் "தஹேக்" நகரத்தில் இயங்கி வருகின்றது.

ஐ. நா. சபையின துணை நிறுவனங்களாவன.

- சர்வதேச தொழிலாளர் நிறுவனம் ILO
- சர்வதேச அணுசக்தி முகவரகம் IAEA
- உணவு விவசாய நிறுவனம் FAO
- உலக சுகாதார நிறுவனம் WHO
- ஐ. நா. கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் - யுனேஸ்கோ UNESCO
- உலக வங்கி - IBRD
- சர்வதேச நாணயநிதியம் - IMF
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் - UNHCR
- உலகவர்த்தக நிலையம் - WTO
- உலக வானிலை அமைப்பு WMO
- ஐ. நா. குழந்தைகள் நிதியம் யுனிசெப் - UNICEF

தொகுப்பு:-
**வே. மணிமாறன்**
விரிவுரையாளர் (NCC)


**பிரதேசசபைகளுக்குத் தேவையான சகல**
**பின்வரும் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்**

- சம்பளப்பட்டியல்
- ஓய்வூதியப்படிவங்கள்
- ஆதனவரிகள்.
- பி. ச. 2
- பி. ச. 3
- பி. ச. 4
- பி. ச. 5
- பி. ச. 6
- பி. ச. 7
- பி. ச. 13
- பி. ச. 14
- பி. ச. 15
- பி. ச. 16
- பி. ச. 17
- கொடுப்பனவு பேரேடு
- களஞ்சியப் பேரேடு
- வைப்புப் பேரேடு
- தினவரவு
- இதரவருமான பேரேடு
- சம்பள இடாப்பு
- உரிமைக்கட்டண பேரேடு

நாடவேண்டிய சிறந்த இடம்
**யா. மா. கூ. சபை பொத்தக நிலையம்**
40/1. நாவலர் வீதி, (ஐந்து சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.


யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ. சபையினரால் 2001 ஆண்டு ஐப்பசி மாதம் வெளியிடப்பட்டது.